## கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013

கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரிற்கும் (ஜெஐசீஏ) இடையில் கைசாத்திட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் -பி 97 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.7(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, கிழக்கு மாகாண சபை அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. கிராமிய வீதிகளை புனரமைத்தல் ஊடாக சமூக சேவைகளை முன்னேற்றுவதன் மூலமும் அதேபோல பொருளாதார நடவடிக்கைகள், சந்தை வசதிகள் மற்றும் உற்பத்தி நிலையங்களிற்கு அணுகும் வழிகளை முன்னேற்றுவதன் மூலம் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களிற்கான வாழ்வாதாரத்தை முன்னேற்றுதல் மற்றும் அதன் மூலம் உளள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கும் பிராந்திய ஏற்றதாழ்வுகளை குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,884 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,664 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 4,944 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,965 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 26 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறள் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

### 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும்

நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட ஜென் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால்

பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட ஜென் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 2,036,594,207 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 5,634,640,807 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| **கூறுகள்** | **2013 ஆம் ஆண்டிற்கான செலவினம்** | **2012 ஆம் ஆண்டிற்கான செலவினம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 1,825,586,628 | 1,994,709,433 | 4,916,461,578 |
| உபகரணங்கள் | - | - | 8,834,466 |
| ஆலோசனை சேவைகள் | 12,962,646 | 22,947,386 | 64,850,135 |
| நிர்வாகக் கிரயம் | 44,586,297 | 207,768,153 | 155,979,859 |
| வரி | 142,640,497 | 207,768,153 | 448,666,937 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 929,823 | 3,824,825 | 10,598,972 |
| வட்டிக் கட்டணங்கள் | 9,888,316 | 16,290,016 | 29,248,860 |
| மொத்தம் | 2,036,594,207 | 2,298,082,525 | 5,634,640,807 |

### 4.2 விசேட ஜென் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான விசேட ஜென் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக் கணக்கில் இருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| **விபரங்கள்** | **2013**<br>**ஜப்பான் ஜென்** | **ரூபா** |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 391,779,111 | 579,793,906 |
| கூட்டு: மீளளிப்புகள் | 1,409,610,769 | 1,836,893,243 |

| | | |
|---|---|---|
| | 1,801,389,880 | 2,416,687,149 |
| கழி:- பற்றுதல்கள் | 1,371,741,739 | 1,788,381,889 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 92,952,641 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 429,648,141 | 535,298,619 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு செய்யப்பட்ட இடைக்கால கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 135,427,263 தொகையான பிடி காசு செயற்திட்டத்தின் பொறுப்புக்களாக பதியப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்பாட்டிலுள்ள சிவில் வேலைகளின் பெறுமதி மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பிடிகாசு என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 5.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதிப்பிரமாண இல. 756 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பொருட்கணிப்பீட்டு சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ரூபா 7,001,512 பெறுமதியான நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போதான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு - 2013 | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | ஜென் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஜென் மில் | ரூபா மில் |
| ஜேஐசீஏ | 3,965 | 4,944 | 1,859 | 1,859 | 3,508 | 5,030 |
| இலங்கை அரசாங்கம் | 699 | 890 | 229 | 187 | 476 | 604 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4,664 | 5,834 | 2,088 | 2,036 | 3,984 | 5,634 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 4,944 மில்லியனிற்கு சமமான ஜ.ஜென் 3,965 மில்லியன் தொகை ஜேஐசீஏ ஒதுக்கியிருந்தது. எவ்வாறாயினும், மொத்த ஒதுக்கீட்டின் 89 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஜ.ஜென் 3,508 மில்லியன் கூட்டு மொத்தத் தொகைகள் 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிர்வாகச் செலவினம் மற்றும் ஏனைய உள்ளூர் வரிகளிற்காக இலங்கை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட ரூபா 890 மில்லியன் தொகையில், மொத்த ஒதுக்கீட்டில் 68 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 604 மில்லியன் கூட்டு மொத்தத் தொகைகள் 2013 திசெம்பர் 31 வரை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

### 6.2.1 ஒப்பந்த நிர்வாகம்

(அ) திருகோணமலை மாவட்டத்தில் வீதி முன்னேற்ற வேலைகள்

மொறவேவ பிரதேச செயலளகப் பிரிவில் எதவென்டிவெவ நடு வீதியின் முதலாவது வரிசை மற்றும் றொரவெவ வீதியின் முதலாவது வரிசையின் 1.9 கிலோ மீற்றர் கொங்றீட் கற்பதித்தல் தொடர்பில் 2011 பெப்ரவரி 12 இல் ரூபா 16,633,991 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) எதவென்டிவெவ நடு வீதி

- கொங்றீட் கலவையின் குறைவான தரம் காரணமாக திரட்டப்பட்ட விலகல்கள் மீதான குறைபாடுகளை திருத்தும் நோக்கில் 0+000 கிமீ முதல் 0+ 100 கி மீ வரை மற்றும் 0+335 கிமீ முதல் 0+700 கி மீ வரையான இடங்களில் கொங்றீட் இடப்பிட்ட வீதியின் மேற்பரப்பில் தார் பிரயோகிக்கப்பட்டுள்ளது.
- பயன்படுத்திய பொட்களின் உறுதி மற்றும் கலவை, மற்றும் வலிமை என்பவற்றின் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை. தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனத்தின் அறிக்கையின் பிரகாரம், 0+100 கிமீ முதல் 0+310 கி. மீ வரையான இடத்தில் 201 மீற்றர் நீளமான கொங்றீட் இடல் குறைவான கலவை மற்றும் தரமற்ற பொருட்களை பயன்படுத்தயமை என்பன காரணமாக திருப்தியற்றிருந்தது. ஆகவே, 100 மிமீ தடிப்புள்ள கொங்றீட் இடுவதன் மூலம் குறைபாடுகள் திருத்தப்பட்டிருந்தது. எவவாறாயினும், பியோகிக்கப்பட்ட கொங்றீட் கலவையிடப்பட்ட மேற்பரப்பில் 09 இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டது. கொங்றீட் கலவையிடல் பிரயோகிக்கின்ற போது

விரிவடைந்ததை இணைத்தல் முறைப்படி சரிசெய்யப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) எதவென்டிவெவ மற்றும் றொரவெவ வீதியின் முதலாவது வரிசையின்

- உரிய கொங்றீட் வீதியின் மேற்பரப்பில் மேற்புறம் சரிவர செய்யப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தகாரருக்கு பிடி காசு விடுவிப்பதற்கு முன்னர் குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவின் 90 சதவீதத்தை செய்ய முன்னர் முற்பண கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், முற்பணக் கொடுப்பனவின் 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,266,399 தொகையான முற்பணம் இறுதி பட்டியல் கொடுப்பனவு மேற்கொள்கையில் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி முன்னேற்ற வேலைகள்

ரூபா 91,470,421 கிரயத்தில் கொட்றீட் இடலுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் 4.065 கிலோமீற்றர் நீளமான பத்து வீதிகள் தொடர்பான ஒப்பந்தம் 2012 மே 22 இல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஐந்து கேள்வியாளர்களில் ரூபா 54,998,282 தொகையான குறைவான விலையில் கோரப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார். கேள்வியாளரால் கோரப்பட்ட வேலைகளிற்கான வீதங்கள் இரண்டு தடவைகள் திருத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, கேள்வி விலையானது ஆரம்ப கேள்வியின் 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 91,470,422 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு செய்யப்பட்ட திருத்தங்களிற்கான குறிப்பு மேற்கொள்ளாமல் கேள்வியை சிபார்சு செய்திருந்தது.

(இ) சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

முற்பண உத்தரவாத பிணைமுறிக்காக மோசடியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டமானது புனரமைப்பு வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரர் தவறியமை காரணமாக அவற்றின் மீது வழங்கப்பட்ட ரூபா 4,950,000 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு பிஆர்ஆர்டிபி/ஈபி/பீரீ/பி2/09 ஆம் இலக்க மற்றும் பிஆர்ஆர்டிபி/ஈபி/பீரீ/பி2/12 ஆம் இலக்க ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட காசக்கல் உத்தரவாத பிணைமுறிக்கு உரிய வர்த்தக வங்கிக்கு வேண்டுகை செய்திருந்தது. எவ்வாறாயினும், வங்கியால் அத்தகைய பிணைமுறிகள்

வழங்கப்பட்டிருக்கவில்லை என வங்கி அறிவித்திருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரர் மோசடியான ஆவணங்கள் சமர்ப்பித்திருந்தார் என நிரூபிக்கப்பட்டது. செயற்திட்டமானது பிணைமுறியை ஏற்றுக்கொள்ள முன்னர் வங்கிக்கு தெடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மேசடியான பிணைமுறி சமர்ப்பித்தமைக்கு எதிராகவோ அல்லது வங்கியிலிருந்து மெய்மையாய்வு மேற்கொள்ளாமல் பிணைமுறி ஏற்றுக்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராகவோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்டவற்றிற்கு மோலதிகமாக, செயற்திட்டமானது மட்டக்களப்பில் தனியார் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பிஆர்ஆர்டிபி/ஈபி/பீரீ/பி2/12 ஆம் இலக்க ஒப்பந்தத்தில் ரூபா 1,539,600 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறியை ஏற்றிருந்ததுடன் பின்னர் ஒப்பந்தகாரர் உடன்பட்டவாறு நிர்மாண வேலையை பூர்த்தியாக்குவதற்கு தவறியமையால் செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வங்கியானது பிணைமுறியில் கையொப்பம் இடும் இடத்தில் மோசடி செய்யப்பட்டதென பிணைமுறி காசாக்குதலை நிராகரித்திருந்தது. செயற்திட்டமானது வங்கியிலிருந்து அதன் தகுதியை மெய்மையாய்வு செய்யாமல் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர் அல்லது உத்தியோத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது ரூபா 349,930,558 பெறுமதியான ஏனைய ஒன்பது ஒப்பந்தங்களின் காலம் நீடிக்கப்பட்டிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

முன்னைய சந்தர்ப்பங்கிளில் சமர்ப்பிக்கப்பட்ட பிணைமுறிகள் மோசடியாக இருந்ததுடன் அத்தகைய செயலாற்றல் பிணைமுறிகளின் நீடித்தலை நிராகரித்திருந்தது எனவும் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட பணிப்பாளர் வங்கியிருந்து அதன் தகுதியை மெய்மையாய்வு செய்யாமல் ஏற்றுக்கொண்ட பொறுப்புடைய ஒப்பந்தகாரர் அல்லது உத்தியோத்தருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் தன்யார் துறை காப்புறுதி கம்பனியிடமிருந்து உரிய ஒப்பந்தகாரரால் பெறப்பட்ட புதிய பிணைமுறிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(iv) கொள்வனவு வழிகாட்டலின் 7.8 ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வியாளர் கேள்விப் படிவத்தில் கையொப்பிட்டிருக்காதுவிடின் கேள்வி நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் மேலும் கவனத்திற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது ரூபா 189,534,879 பெறுமதியான பிஆர்ஆர்டிபி/ஈபி/பீரீ/பி3/06 ஆம் இலக்க மற்றும் பிஆர்ஆர்டிபி/ஈபி/பீரீ/பி3/8பீ ஆம் இலக்க ஒப்பந்தங்கள் தொடர்புபட்ட கேள்வி ஆவணங்களில் கேள்வியாளர் அவருடைய கையொப்பட் இடப்பட்டிருக்காத போதிலும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது.